விலை ஒரு அணா. UDUMALAI BEERANGI டெலிபோன் 259

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R.

வாரப்பதிப்பு

வெடி 1. ] சென்னை, சனிக்கிழமை (23-10-1948)

# பெரியாரும் ராஜாஜியும்

தமிழ்வளநாடு நிலவளம், தொழில்வளம், பொருள் வளம் ஆகியவற்றின் தாயகம், பிறப்பிடம், அஸ்திவாரம், மூலஸ்தானம், கோவை, சேலம், ஜில்லாக்களைக் கொண்ட, மலைவளமானில மாகும். எப்படி எனக்கேள்வி பிறக்கலாம். தென்னாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களென்பது அறிந்ததே. ஆனல் இதை நெற்களஞ்சியமாக்கியவை எவை? காவிரி ஆறும், அதனுடன் வந்துசேரும் கூடல் ஆறுகளான அமராவதி, பவானி, நொய்யல் ஆகியவைகள்தானே! இந்த வற்ரு நீர்வளப் பேராறுகளின் தாய்மை இடம், வளர்ந்த இடம் எவை? கோவை ஜில்லாவும் சேலம் ஜில்லாவின் பகுதிதானே. எனவேதான் தென்னாட்டிற்கு உணவு தரும் முதல் தாய் கோவை சேலம் வட்டகையாகிறது.



இதேபோல் தொழில் வளத்திற்கும், ஒளிவளத்திற்கும் தாயகம் இந்த கோவை-சேலம் வட்டாரமேதான். தென்நாட்டில் தொழில்கள், ஆலைகள், ஆகியவை விரைந்து வளர்ந்ததற்கு உதவியாகியது எது? மின்சார சக்தி. இந்த மின்சார சக்தியின் தாயகம் எங்கே உளது? கோவை, சேலம் வட்டகையில்தான். உலகில் மிகப் பெரிய மின்சார தேக்கமான மேட்டூர் தேக்கமும், பைக்காரா தேக்கமும் உள்ளது கோவை-சேலம் மண்ணில். சென்னைமாகாண மெங்கும் மின்சார விளக்கொளி வீச உதவி புரிவதும் இந்த இரு மின்சாரத் தேக்கங்கள்தானே!

நிலவளத்திற்கு காவிரியையும், பவானி முதலிய ஆறுகளையும், தொழில்வளத்திற்கு, ஒளிவளத்திற்கு மேட்டூர், பைக்காரா மின்சாரத் தேக்கங்களையுமளித்த கோவை-சேலம் மண்டலம், அரசியல் வளத்திற்கும் சமுதாய வளத்திற்கும், இருபெரும் அறிவு ஜீவநதிகளையும் ஆற்றல் மின்சார்த் தேக்கங்களையும் அளித்துதவியிருக்கிறது.

இந்த இரு ஜீவநதிகள், மின்சாரத் தேக்கங்கள் யார்? கோவை, ஈரோடளித்த பெரியார் ராமசாமியும், சேலம் சிற்றூரளித்த ராஜகோபாலாச்சாரியாருமே யாவர். இவ்விருவரும், உதித்ததும் ஏறக்குறைய ஒரே ஆண்டில்தான் இவர்களுடைய குழந்தைப் பருவ வாழ்க்கையும் வளர்ப்பும் இளங்காளை வாழ்க்கைப் போக்கும் ஏறக்குறைய ஒரேமாதிரியாகத்தானிருந்திருக்கின்றன. இருவரும், அறிவு வளர்ச்சியுற்ற வயதுமுதற்கொண்டே, புரட்சி மனப்பான்மை கொண்டிருந்திருக்கின்றனர். சாதி சமய வேறுபாட்டில் வெறுப்பை வெறும் வாயளவிலல்லாது செயலளவில் காட்டி வந்திருக்கின்றனர். இதனுல் உறவினரின் வெறுப்புக்கும், தீண்டாமைக்கும் ஆளாகி அல்லலுற்றும் இருக்கின்றனர். ஆனல் இந்த, தடைக்கல், முட்டுக்கல்களைக் கண்டு இவர்கள் மலைப்போ தயக்கமோ, கவலையோ கொள்ளவில்லை. தடைக்கல்லை மிதிகல்லாக்கிக்கொண்டு, வெற்றிப் பாதையிலே இன்றளவும் முன்னேறி வந்திருக்கின்றனர்.

இருவரும், தனிப்பட்ட அன்பிலே இணைந்தவர்கள். பொதுநல தியாகப்பண்பிலே இணைந்தவர்கள். சுகவாழ்வுத்துறையிலே இணைந்தவர்கள். சொல்வன்மையிலே இணைந்தவர்கள். எழுத்து வளத்திலே இணைந்தவர்கள். சுருங்கக் கூறுமிடத்து, இந்தப் பொதுநலப் பணி அரங்கத்திலே இவ்விருவரும் சரிநிகர். சரிகட்டு, மற்போர் வீரர்கள் எனலாம். ஆனல் போர்முறையில்தான் இருவருக்குள்ளும் மாறுபாடு. கோட்பாடு முறையிலேதான் வேறுபாடு. ஆச்சாரியார், பஞ்சதந்திரசாணக்கியர். தந்திரோபாய சூட்சமங்கள் நிறைந்தது, அவருடைய போர்முறை. சுயலாபமும் அளிப்பது. ஆனல் பெரியாரின் போர்முறையோ நெட்டுக்கு நேர் ரணகள முறை. திரை மறைவு, சூட்சம வேலைகள் இல்லாதது. நெட்டுக்கு நேர் நின்று சாடும் வாட்போர் முறைஎன்றும் கூறலாம். இதில் சுயலாபமோ! வெறும்புகழ்தான் வீராதி வீரப்பட்டந்தான். எனவேதான், இருவரும், ஒரு களத்தில் நின்று, எதிரிகளுடன் ஒரு முகமாகப் போராட இயலாது போயிற்று? இவ்விதம் இவ்விருவரும் இணைந்திருந்து, போர்நடத்த வியன்றிருந்தால், தென்னுடு இத்தனை காலம், ஆங்கிலேயர்களுக்கோ, அல்லது வடக்கத்தியாருக்கோ ஒருக்காலும் அடிமையாக இருந்திருக்காது என்று துணிந்து கூறலாம். இவர்கள் இணக்கத்தால் அரசியல் தளையை அறுத்திருக்கலாம் ஆனல், மதத்தளையை, சமுதாயத்தளையை வைதீகத்தளையை, சாதித்தளையை, அறுத்தெரிய வாய்ப்புக் கிடைத்திருக்காது.

இவர்கள் இணைந்திருந்தால், அரசியல் துறையிலே, பொருளாதாரத் துறையிலே, அயலார் சுரண்டல் ஒழிப்புத்துறையிலே மாபெரும் வெற்றி நமக்கு ஏற்பட்டிருக்கலாம். இது ஒருவழி வெற்றியேயாகும். இவர்கள் பிரிந்ததினுல் இருவகை வெற்றிக்கும்இடமேற்பட்டுள்ளது. ஆச்சாரியாரின் இணைப்பிலிருந்து பிரிந்ததினுல்தான் பெரியார் சமுதாய ஊழலொழிப்புப் போரில் தனிப்பெரும் வீரராக விளங்க வகை யேற்பட்டது. இணைந்திருந்தால் இதற்குவழி ஏற்பட்டிருப்பது சந்தேகம். ஏனெனில் ஆச்சாரியார், பெருங்காயப் பாண்டம் போல், தன் இனவாசனை, மதவாசனை, ஓரளவுக் கொண்டவர். தன் இனவுயர்வும் ஆதிக்கமும் சாக, மருந்தீடு வைக்க அவர் ஒருக்காலும் ஒருப்படவு மாட்டார். வழிவிடவுமாட்டார். பெரியாரின் சமுதாய ஊழல் ஒழிப்புப் பாதையிலே தடைசெய்யும் ஒரு முட்டுக்கல் பேர்வழியாகவோ, குட்டிப்பூனையாகவோ, விலங்காகவோதான் இருந்திருக்கலாம்.

இருவரும் அரசியல் துறையிலே, குடியாட்சி முறையிலே அறிவாளிகளே. ஈரோடு பெரியார் நகராண்மைத் தலைமையும் ஆச்சாரியார் சேலம் நகராண்மைத் தலைமையும் கொண்டு, நலம்பல செய்திருப்பதும் திறம்பட நிர்வகித்திருப்பதும் அவர்களின் எதிரிகளும் ஒப்புக் கொள்வர். அறிவாற்றலிலே அவரவர்கள் துறையிலே இருவரும் சரி எடையானவர்களே.

இவர்கள், பிரிந்ததினுல் இன்னெரு விசித்திரமும் நிகழ்ந்திருக்கிறது. அதாவது அவரவர்களின் தனித்திறமை, தனி அறிவொளி தனித் தனியாக இருசூரியன்கள் போல் ஒளிரவும் இயைந்திருக்கிறது. இந்த இரு சூரியர்களும், ஒருவருக்கொருவர் கேடுவிளைக்கும் பகைப்புலன்களுமல்ல. இவ்விருவரின் பொதுசேவை வரலாற்றை ஆராய்ந்து, நடுநிலைமை நின்று சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, இவரால் அவருக்கு உரம், அவரால் இவருக்கு உரம் என்ற உண்மை தெளிவுறப்புலனுகாமல் போகாது.



பெரியாரின் எதிர்ப்பு, காங்கிரசின் அடி நாளிலே ஏற்பட்டிராமல் போனுல், ஆச்சாரியார், தன் இனத்தவரின் வலிமையைத் திட்...

(8-ம் பக்கம் பார்க்கவும்)

# நானும் அரசியலும்

## நம்மின் உண்மையான நிலைமை

"உடுமலை - பீரங்கி"

(முதல் புத்தகத்தில் ஒரு சிறுபகுதி.)

[ உடுமலை. B. இரங்கநாதன். ]

[illegible] கொட்டி, [illegible] றி, பசு [illegible] போலும், [illegible] போலும், [illegible] ம, மலை கிறுத்தங்கள், தொழிலாளர்களின் பேரால் அட்டூழியங்கள், ஒரு பக்கம் பணக் குவியல், மறுபக்கமோ ஏழைகளின் தத்தளிப்பு, அர்த்தமற்ற தருமங்கள், பாருக்கேற்காத பொது வரிப் பண வினியோகங்கள், அவசியமில்லாத சீர்திருத்தங்கள், பிச்சைக்காரரின் தொல்லை, ஒவ்வொரு கட்சிக்குள்ளும் பல பிளவுகள், ஒயர்த் தகராறுகள், மத வித்தியாசங்கள், தலைவர்களின் சவால்கள், ஹிந்து-முஸ்லீம் சச்சரவுகள், ஊருக்குள் ஆதாரமில்லாத பீதிகள், அநியாய சாவுகள், இவையாவும் நாம் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களின் ஒரு பகுதியேயாகும். சொல்லப் புகின் மிக விரியும். இந் நிலைமையிலும் காங்கிரஸ் ஆரவாரமும், ஆனந்தமும் ஒரு பக்கம். மறுபக்கமோ முஸ்லீம் லீக்கின் சவால். இத்துடன் சீக்கிஸ்தான் பிரச்சினை. திராவிடஸ்தான் சப்தமோ வானைப் பிளக்கிறது. பிராமணஸ்தானுக்கோ அடிகோலியாயிற்று. ஆங்கிலஸ்தான் எப்பொழுதுமே உண்டு, ஆகவே "தர்க்கத்திற்குப் பின் உண்மை சண்டைக்குப் பின் சமாதானம்" எனச் சொல்லிவந்ததெல்லாம் வீண் பகற் கனவாகவே முடிந்து விட்டது. இது மாத்திரமல்ல. இனியும் எவ்வளவு அல்லல் படவேண்டியிருக்கிறதோ யாறிவார்?

### ஏழைகளின் நிலைமை

பிச்சைக்காரனுக்குண்டு சென்றவிடமெல்லாம் சிறப்பு. இருக்க இடம், நிற்கநிழல், உண்ண உணவு, உடுக்க உடை. ஆனால் ஏழைகளுக்கோ ஒருவருமில்லை ஒரு ஸ்தாபனமும் இல்லை. ஒரு உதவியும் இல்லை. ஒருகக்ஷியுமில்லை. அவர்களின் பரிதாபக்குரல் கேட்கவில்லையா? பிச்சைக்காரர்களும் ஏழைகளே. ஆனால் ஏழைகள் பிச்சைக்காரர்கள் அல்லவென்பதையும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஏழைகளே யென்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ஏழைகளே பெரும்பான்மையாக இருக்கின்றபடியால், "ஏழைகளுக்கு நாங்களே, ஏழைகளுக்கு எங்கள் கக்ஷியே, எங்கள் கக்ஷி ஏழைக் கக்ஷி, முதலாளிகள் ஒழிக. முதலாளித்துவம் ஒழிக." என்பதெல்லாம் ஏழைகளை உபயோகித்துக்கொள்ளும் சுரண்டல் வழியே தவிர ஏழைகள் என்னும் பெருங்கூட்டம் இதுவரையும் உபயோகப் படுத்தப் பட்டு வந்தார்களே யொழிய, உண்மையாகவே ஏழைகளுக்கு எவர் வந்து என்ன என்ன சாதித்து விட்டார்கள்? எனக் கேட்கின்றேன் இனியும் என்னென்ன சாதிக்கப் போகிறார்கள்? என்றுதான் கேட்கின்றேன்.

ஏழைகள் எவ்விதத்தும் எங்கேயும் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறார்கள். கவர்ன்மெண்டில் பட்ஜெட் வித்தியாசங்கள் ஏற்பட்டாலோ கீழ்த்தர உத்தியோகத்திலிருப்பவர்களுக்கே ஆபத்து. ரைல்வேயில் பண அவசியம் ஏற்பட்டால் ஏழைகள் பிரயாணஞ்செய்யும் மூன்றும் கிளாஸ் டிக்கட்டுகளின் விலையை உயர்த்தல். போஸ்டல் டிபார்ட்மென்டில் ஏற்பட்டாலோ பெருவாரியாக ஏழைகளே உபயோகிக்கும் கார்டின் விலையை உயர்த்தல். கார்ப்பொரேஷன் முனிசிபாலிடி, இவைகளில் பணக் குறைவு ஏற்பட்டாலோ, ஏழைகள் இருக்கும் படியான பேட்டைகள், தெருக்கள் முதலிய வைகளுக்குச் செய்யவேண்டிய அபிவிருத்தி முதலிய வைகளை ஒத்திவைத்தல். ஏழைகள் உபயோகிக்கும்படியான ரிக்‌ஷாக்கள், சைகில்கள் முதலிய வைகளின் வரியை உயர்த்தல். அரசியலிலும் அப்படியே. இது மாத்திரமல்ல. மற்றொரு விசேஷம். காப்பிக் கடைகளிலோ வென்றால் தத்தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏழைகள் பெருவாரியாக, பசியாற்றும் பொருட்டு சாப்பிட்டாகவேண்டிய இட்டலி, தோசை முதலியவைகளை, எடையிலும், அளவிலும் எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கமுடியுமோ, (கலப்பில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகப் படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகப்படுத்துதல்) அவ்வளவுக்கும் ஈவிரக்கமில்லாமல் குறைத்தல்.

ஆகவே சற்றே யோசித்துப்பார்த்தால், பெருவாரியாக இருக்கும் ஏழைகளுடன்தான் எல்லாத்துறைகளிலும் போட்டி. ஆனால் அடையும் லாபத்தைக்கொண்டு, ஏழைகளிலிருந்து விலகி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் பிச்சைக்கார சமூகத்திற்கு, தனிச் சத்திரங்கள், அன்னதானம், வஸ்திரதானம், சொர்ன தானம், சொல்லா தானம் முதலாய ஆடம்பரங்கள். இவைகளெல்லாம். ஏழைகளுக்காகவா என்றுதான் கேட்கிறேன். பின் செய்யும் உதவியை, பிச்சைக்காரராகாமுன், ஏழ்மையில் தவிக்கும்போது அவ்வேழைகளுக்கே செய்திருந்தால், அவ்வேழைகள் எப்படி பிச்சைக் காரர்களாயிருக்க முடியும்? ஆயினும் பிச்சைக்கார சமூகம் நிலைப்பதற்கும், வளர்ச்சி பெறுவதற்கும் நம் இந்தியாவைப் பொருத்து பல்வேறு காரணங்களும் உண்டு என்பதையும்இன்னும் இதைப் பொருத்த இதர விஷயங்களையும், இதுகளையும் பிற பின் கவனிப்போம்.

அரசியல் உலகத்திலும் ஏழைகளின் பெயர்களைச் சொல்லி ஏழைகளை உபயோகப்படுத்தி, ஏழைகளின் ஒட்டுகளைப்பெற்று, அவரவர் ஸ்தானத்தில் அமர்ந்துவிட்ட பின்னர், 'நீ யாரையா? நான் யாரையா?' என்ற யோக்கியதைதான். அவர்களுக்குள்ளாகவே பேச்சு வார்த்தைகள். எப்படி? ஓட்டுக்களை கொடுத்தனுப்பிய ஏழைகளுக்கோ பிறருக்கோ தெரியாவண்ணம், இரகசியத்தில், இருட்டறையில் அவர்களுக் குள்ளாகவே சிரிப்புகள், தமாஷ்கள், நையாண்டி, கிண்டல், குதர்க்கங்கள், பல்லாயிரக் கணக்கில் செலவுகள். இவைகளைவிட வேறென்ன செய்து விட்டார்கள்?

### நானும் அரசியல் கக்ஷிகளும்

என்னைப் பொருத்தவரை நான் எக்கக்ஷியையும் சேர்ந்தவனல்ல. எதொருகக்ஷியுமெனக்குத் தேவையுமில்லை. **பிறந்தவர் இறப்பர். இறப்பவர் பிறப்பரோ நானறியேன்.** உயிருடன் இருக்கும் சொற்பநாளில் பசி, பிணி, துன்பம் முதலிய கடும் பிடிகளிலிருந்து தப்பி எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டுமென நினைக்கும், அல்லது அதற்காக வேலைசெய்யும் ஒரு கக்ஷி ஏதேனும் இருந்தால், அல்லது ஏற்பட்டால் அக்கக்ஷியைச் சேர்ந்தவனே யாவேன் நான்.

ஆயினும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் எனக்கு அக்கரை மிகவும் உண்டு என்று சொன்னால் சிலர் அதிசயப்படுவர். என் விஷயங்களைப் படித்தோரும், பேச்சைக் கேட்டோரும், என்னுடன் தர்க்கித்தவர்களும், என்னுடன் பழகியவர்களும், இதைக்காண எவ்விதத்திலும் சந்தேகியார்கள். ஆனால் மூடபக்தனல்ல. காங்கிரஸ் கக்ஷிக்கும் எதிர் கக்ஷிகளிருக்கத்தான்வேண்டும் என்று நினைப்பவர்களில் நானுமொருவன்.

[தொடரும்]

# செய்தியும் சிந்தனையும்!

### வடக்கும் தெற்கும்.

—: (x) :—

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு இவ்வாண்டில் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவும் ஐக்ய மாகாண காங்கிரஸ்வாதி திரு. புருஷோத்மதாஸ் தாண்டனும் போட்டியிடுகின்றனர்- மற்ற இரு அபேட்சகர்கள் வாபஸ் வாங்கிக் கொண்டனர். தேர்தல் 24-ம் தேதி.

இதைக்கண்டதும், திராவிடக் கட்சியார், "நாங்கள் தலை தலையாக அடித்துக்கொள்கிறோமே, வடக்கி வடக்குதான் தெற்கு தெற்கு தெற்குதான். வடவருக்கு ஒரு நீதி, தென்னவருக்கு ஒரு நீதிதான் கிடைக்குமென்று, பார்த்துக்கொள்ளுங்கள் எங்கள் கூற்றின் உண்மையை. இதற்குமுன் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் வடவர்கள். அவர்களுக்கிப் போட்டியில்லை. காந்தியாரோ குறுக்கு விழுந்து போட்டியைத் தடுத்துவந்தார். தங்கு தடையின்றி 'ராஜ பார்ட்' போல் வருவார். ராஜ பார்ட் போல் தலைவராகி கட்சியை ஆட்டுவிப்பார். இப்போது இந்த தென்னாட்டு ஆந்திரப் "பார்ப்பான்" இந்தத் தலைவர் "இந்திர" பதவிக்கு ஆசைப்பட்டால் சும்மா விட்டுவிடுவார்களா ஆளப்பிறந்த இனத்தார்? "குபேர" திசைக்காரர்களுடன் "எம்திசை" ஆமக்காய் அடியார் சரிசமமாக அமர்ந்து ஆதிக்கம் செலுத்த ஆசைப்பட்டால் விடுவார்களா இந்த மூக்கறுப்பு மரியாதைகள். கிடைக்காமலிருக்கத்தானப்பா, நாம் நம் கனவில் தன்மானத்தோடு இருக்கத்தானப்பா, தென்னாடு, வடவர் ஆதிக்க விலங்கிலிருந்து அறுபட்டுத் தனியாட்சித் தனி நாடாக இருக்கவேண்டுமென்பது." என்று சொல்லிக் காட்டித்தானே தீருவார்கள்.

### ஒரு வாளித் தண்ணீர் ரூ. 2 8 0

கலகக்காரர்களால் தண்ணீர் தேக்க ஏரி உடைபட்டுப் போனதால் ரங்கூனில் தண்ணீர் கிடைப்பது அரிதாகி விட்டது. ஒரு வாளித் தண்ணீர் ரூ, 2-8-0 வீதம் விற்கின்றனர் தண்ணீர் தூக்கிகள்.

இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது! சென்னை காப்பி ஓட்டல்காரர்களும் பால்காரர்களும் அரையாளாக்கு இரண்டணாவிற்கு விற்கிறார்களே!

## வரப்பெற்றோம்

**நட்சத்திரம்:** சினிமா வெளியீடு. ஆசிரியர்:தாமரைக்கண்ணன்—26 பக்கங்கள், விலை அணா 0-2-0 காரியாலயம்: ஒப்பணக்காரத் தெரு, கோயமுத்தூர்.

**மதிப்புரை பிற பின்**

**வாழ்வு:** சங்கு-1 முழக்கம்-9 10-10-48 ஆசிரியர் தே. நாராயணன். உதவி ஆசிரியர்: கஜேந்திரன். பக்கங்கள்-8. விலை ஒரு அணா. செந்தமிழ் பதிப்பகம், புதுக்கோட்டை

—நன்றி—

**குறிப்பு:—** மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(ம-ஆ-ர்)


## சீர்திருத்த வாதி

(வார இதழ்)

தமிழ்நாட்டின், தமிழினத்தின் முன்னேற்றத்திற்காகச் சிறந்து பணியாற்ற 14-11-48 அன்று வெளிவருகிறது:

ஏஜண்டுகள் தேவை:—

விவரங்கட்கு:— நிர்வாகி
சீர்திருத்தவாதி
சேண்பாக்கம்
வேலூர் (வ—ஆ)

# மாகாணத்தில் பாதிப்பேர் வாக்காளராகவில்லை?

## சென்னை சட்டசபையில் முறையீடு

சென்னை, அக். 19—

இன்று அசெம்பிளியில் வோட்டர் ஜாபிதாவில் வோட்டர்களை பதிவு செய்வதைப்பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டபொழுது மந்திரி தி, பி. கோபால் ரெட்டி வோட்டர்களை பதிவு செய்து கொள்வதற்காக மனு செய்து கொள்வதற்கு ஏறபட்டிருக்கும் காலத்தை நீடிப்பதைப்பற்றி சர்க்கார் யோசித்து வருவதாகவும், அக். 23-ந்தேதி ஏற்படும் நிலைமையை அனுசரித்து யோசித்து முடிவு செய்யப்படும் என்றும் கூறினர்.

குடிசைகளில் வசிப்பவர்கள் வோட்டர் ஜாபிதாக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று கிராமங்களில் இருந்து புகார் வந்திருக்கிறது. இது உண்மையா என்று திரு. வி. ஐ. முனுசாமி பிள்ளை கேட்டார்.

குடிசைகளில் வசிப்பவர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாயும், நடைபாதைகளில் வசிப்பவர்கள் பதிவு செய்து கொள்ளப்படவில்லை என்றும் 180 நாட்களுக்கு ஒரு இடத்தில் வசிப்பவர்களும் தான் பதிவுசெய்து கொள்ளப்படுவார்கள் என்று மந்திரி கூறினர்.

ஜனப் மகமது இஸ்மெயில்: அக் 23-ந் தேதிக்குப்பிறகு மனுசெய்து கொள்வதற்கு காலத்தை நீடிப்பதைப்பற்றி சர்கார் யோசித்து வருகிறதா?

பதில்:—ஆம். அதைப்பற்றி சர்க்கார் யோசித்து வருகிறது. அக். 23-ந் தேதி என்ன நடைபெறுகிறது என்பதை பார்த்த பிறகு தான் அவ்விஷயம் முடிவு செய்யப்படும்.

பேகம் அமிருத்தீன்:—ஒரு லட்சம் ஜனங்கள் சென்னையில் பதிவு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. அப்படி இருக்கும் பொழுது ஏன் அவர்களை பதிவு செய்யக்கூடாது?

ப:—அவர்கள் வேறு கிராமங்களிலிருந்து சென்னைக்கு வந்திருக்கலாம். அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

ஜனப் அஸன் கோயா: மலையாளத்தில் 25 சத விகித ஜனங்கள் தான் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. விடப்பட்டிருப்பவர்களை பதிவு செய்வதற்காக சர்க்கார் அதிக காலம் கொடுக்குமா?

பதில்:—இந்த புகார் உண்மையா என்று எனக்குத் தெரியாது. அது உண்மையாக இருந்தால் அதைப்பற்றி விசாரித்து பரிகாரம் செய்யப்படும்.

திரு. கே. டி. கோசலராம்: திருநெல்வேலி ஜில்லாவில் 50 சத விகித ஜனங்கள் பதிவு செய்யப்படவில்லை என்பது மந்திரிக்குத் தெரியுமா?

பதில்:—இந்தியர்களின் அதிக மரண விகிதத்தை யோசிக்கும் பட்சத்தில் 50 சத விகிதம் குறைந்தது அல்ல.

இராமசாமி முதலியார்: வோட் பதிவு திருப்திகரமாய் நடந்திருப்பதாக மந்திரி கூறுகிறார். மொத்தம் எத்தனை சதவிகிதம் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பதில்:—அது எதிர் பார்த்ததற்கு மீறிபோயிருக்கிறது.

ஸ்ரீ ஆர். வி. சாமிநாதன்:—ராமநாதபுரத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருப்பதால் சுமார் 2 லட்சம் ஜனங்கள் அந்த ஜில்லாவைவிட்டு தஞ்சாவூர் ஜில்லாவுக்குச் சென்றுவிட்டனர். அவர்களை எப்படி பதிவு செய்வது?

பதில்:—அது சிக்கலான பிரச்னை. அதற்கு பதில அளிக்க முடியாது. அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லாவிட்டால் அவர்களை பதிவு செய்வது கஷ்டந்தான்.

ஜனப் அன்வார்: சென்னை மேயர் பதிவு செய்யப்படவில்லை என்பது உண்மையா என்று சர்க்கார் கூற முடியுமா?

பதில்:—ஒருக்கால் அவர் பதிவு செயயும் தினத்தன்று வீட்டில் இல்லாமல் இருந்திருக்கலாம்.

பல கோஷா ஸ்திரீகள் மலையாளத்தில் பதிவு செய்யப்படவில்லை என்று ஜனப் மொய்தீன்குட்டி முதலியோர் புகார் செய்தபோது அவர்கள் பதிவு செய்யப்படவில்லை என்பதை தாம் ஒப்புக்கொள்ள முடியாது என்றும் அப்படி அவர்களை பதிவு செய்வதில் கஷ்டம் இருப்பதாயும் அவர்களுக்குப் பதிலாகப் பிரதிநிதிகள் வர வேண்டியதாக இருப்பதாயும் பொய்யான பேர்வழிகள் மனு செய்து கொள்வார்கள் என்றும் போலி நபர்களை பதிவுசெயய வேண்டியதாக இருக்கும் என்றும் இருந்தாலும் அதைப்பற்றி பரிசீலனை செய்வதாயும் மந்திரி கூறினர்.

ஜனப் மஜீத்: எல்லாமந்திரிகளும் பதிவு செய்யப்பட்டனரா?

பதில்:—மற்ற மந்திரிகள் பதிவு செய்யப்பட்டனரா என்பது எனக்குத் தெரியாது, நான் பதிவு செய்யப்படவில்லை. (சிரிப்பு)

ஜனப் மகமது இஸ்மெயில்:—பல உப கேள்விகள் சரமாரியாய் கேட்கப்பட்டதிலிருந்து வோட் பதிவு திருப்திகரமாக இல்லை என்று தெரிகிறது. பதிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலம் நீடிக்கப்படுமா?

பதில்:—உப கேள்விகள் கேட்கப்பட்டதிலிருந்து வோட் எடுப்பது திருப்திகரமாக இல்லை என்று சொல்லமுடியாது. சலுகை கொடுப்பதால கேள்விகள் இம்மாதிரி கேட்கப்படுகின்றன. காலம் நீடிக்கப்பட வேண்டுமா என்பதைப் பற்றி யோசிக்கிறேன்.

# சென்னை சோடா, கலர் கமிஷன் வியாபாரிகள் சங்கம்

## நிர்வாகிகள் தேர்தல்

சென்னை, அக். 15—

நேற்று மாலை 7-மணிக்கு சென்னை சோடா, கலா கமிஷன் வியாபாரிகள் சங்கக் கூட்டம் சென்னை மகாஜன சபைக் கட்டிடத்தில் ஸ்ரீ கே. எஸ். ஏகாம்பரம் தலைமையில் கூடியபொழுது பின் கண்ட நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்:—

ஸ்ரீ கே. எஸ். ஏகாம்பரம் தலைவர். ஸ்ரீமான்கள் கபாலி செட்டியார். என். மார்க்கண்டன், ஐயம் பெருமாள் உப தலைவர்கள். ஸ்ரீமான்கள் டி. எம். தக்ஷிணாமூர்த்தி, எம். ரங்கநாதம் பிள்ளை காரியதரிசிகள், ஸ்ரீ ஏ. கோவிந்த செட்டியார் பொக்கிஷதார். நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்:—ஸ்ரீமான்கள் ஐயாவு முதலியார் (ஜேம்ஸ் கம்பெனி) கே. நடேச பிள்ளை (மோகன் கம்பெனி) பி. சுப்பராய நாயகர் (டி. கே. சாமி அண்டு கம்பெனி) எம். ஸ்ரீனிவாச முதலியார் (லேபர் கம்பெனி) எம். ஷண்முகம் செட்டியார், டி. எம். ஏழுமலை செட்டியார் (கமலா) எஸ். குப்புசாமி நாயக்கர் (இந்தியன் எரால்) கே. ஆர். வஜ்ரவேலு முதலியார் (ஜான்ஸன்) மாணிக்க நாயகர் (ஸ்காட் கம்பெனி) கோவிந்தசாமி நாயுடு (குட்வில்) ஆர். ராமசாமி முதலியார் (கே. எஸ். வில்ஸன்) எம். கிருஷ்ணன் (ராயப்பேட்டை ஜேம்ஸ்) எஸ். ஷண்முகம் (பெரம்பூர் ஷண்முகம் கம்பெனி) வி. தக்ஷிணாமூர்த்தி நாயுடு (சாரதா)

# நண்பர்களே!

# தோழர்களே!!

# அனுதாபிகளே!!!

"உடுமலை பீரங்கி"யை நடத்துவது நாம். ஆனல் உங்களில் ஒவ்வொருவருக்கும் இது சொந்தம். உங்களுடைய சொந்த ஆயுதம். ஆதரியுங்கள் உடுமலை பீரங்கியை.

கூட்டு ஆசிரியர்

## அறிக்கை

ஏஜண்டுகள், எம்பேரில் கருணை கூர்ந்து, ஏஜன்ஸி நமூனக்களைக் கையெழுத்துடன் அனுப்பிதருவதுடன் டிபாசிட் தொகையும் அனுப்பித்தந்து, "பீரங்கிக்கு" பேராதரவு அளிக்கவேண்டுமாய் மிகவும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்
சென்னை 23—10—48 சனிக்கிழமை

# தென்னாட்டவருக்கு யோக்கியதையும் உண்டா?

சென்றவாரம் "புதுடெல்லி"க்கு ஒரு தென் இந்தியரின் பெயரைச்சூட்டியே யாகவேண்டுமென்ற அவசியத்தையும அவசரத்தையும் அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தி யிருந்தோம்.

இவ்வபிப்பிராயத்துக்கும் எல்லோரும் இசைந்து நிற்பார்கள், மாறுபட்ட அபிப்பிராயம் உள்ளவர்கள் இரார்கள் என்று எண்ணுவதற்கு இடமில்லை. அதை உணர்ந்தும் எம்முடைய முடிவை மாத்திரம் எவ்விதமும் மாற்றிக்கொள்ளவோ, தளர்த்தவோ எம்மால் இயலவில்லை. மாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படவில்லை. நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு போகிறதேயொழிய கடுகளவும் மேம்பட்டு வருவதாகத் தெரியவில்லை.

வடநாட்டவருக்கு அளவுகடந்த விசேஷத்தையும் விளம்பரத்தையும் கொடுத்ததற்கும் இக்கேவலமான நிலையை ஏற்படுத்தியதற்கும் முக்கிய கர்த்தாக்கள் பார்ப்பன சகோதரர்களும் பார்ப்பன பத்திரிகைகளுமே என்று சொன்னால் வீண்பழி யென்றே கருதுவர், பலர். ஆனால் ஆழ்ந்து கவனிப்பின் அறிவும் ஆற்றலும் படைத்த எம் பார்ப்பன சகோதரர்களே நாம் கூறுவதை தங்கு தடையின்றி ஒத்துக்கொள்வார்கள்.

பிறப்பில் உயர்ந்தவர் என்றே எதார்த்தத் திராவிட மக்களை பலகாலும் நம்பச்செய்து வந்திருக்கின்றனர். "பிறப்பில் உயர்ந்தவர் பார்ப்பனர், தாழ்ந்தவர் மற்றையோர்" என்ற நம்பிக்கை கொண்டு, பார்ப்பனரின் சொன்ன சொல்லுக்கெல்லாம் கூத்தாடியும், கொண்டிருந்த தீரமும், நாடாளும் திறமையும், பகுத்தறியும் ஆற்றலும், உண்மையை உரைக்கும் துணிவும், உரிமையைக் கேட்கும் துடிப்பும் அற்றவர்களாய், பார்ப்பனர்களுக்கு மாறாக நடந்தால் தேவதண்டனை யேற்படும் என்ற பயத்துக்கு அஞ்சி, கோழைகளாகி, பார்ப்பனர்களால் விசேஷிக்கப்படும் ஒவ்வொருவரையும், அவர் யாராயிருந்தாலென்ன? எந்நாட்டவராயிருந்தால்தானென்ன? திராவிடர்கள் தத்தம் குல தெய்வங்களாகவே பாவித்து வந்ததனாலேயே நாடு இக்கேடுற்ற நிலைக்கு வந்தாகவேண்டியாயிற்று. தம் மானத்தை பிறருக்கு பறிகொடுத்தாவது திராவிடர்களை அடக்கியும் ஒடுக்கியும் வருவதில்தானே முனைந்து நின்றனர், பார்ப்பனர்கள். பார்ப்பனர்களைப்பற்றி இவ்வளவு சொல்ல நேர்ந்ததை நினைக்க மிகவும் வருந்துகின்றோம். ஆயினும் நாட்டையும் நாட்டின் மக்களையும் இவ்வளவு மோசமான நிலைக்குக் கொண்டு வந்ததை நினைப்பின் ஈடுசெய்ய எவ்வகையும் இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பின், திருந்திக்கொள்ள வேண்டியதே யாகும். இதுவும் ஒரு கணத்தில் ஏற்படக்கூடியதுதான். பார்ப்பனரின் அறிவும் மூளையும் ஒரு தனிப்பட்ட விசேஷத்தையுடையது. பொறாமை படக்கூடியதே. அவ்வறிவை பிறரை ஏமாற்றவும் உபயோகிக்கலாம். அதே சமயத்தில் பிறரின் அச்சமும் கலியுந்தீர, பிறரின் சௌகரியத்துக்கும், சமயத்துக்கும், சந்தர்ப்பத்துக்கும் தக்கபடி, தம்மையே அமைத்துக்கொள்ளவும், பயன்படுத்திக் கொள்ளலாம். வடநாட்டவரின் ஆதிக்கம் நிலைபெற உதவிசெய்து, திராவிடர்களை இதுகாறும் அடக்கி, ஒடுக்கி, ஆண்டுவந்த மூளையை இப்போது வடநாட்டவரின் வஞ்சகச் செயல்களையும் சுயநலப் போக்கையும் விளக்கிக் காட்டி, (அவ்விதம் செய்ய மனமும் துணிவும் இல்லாவிடின், தமக்குள்ளாகவாவது ஒத்துக்கொண்டு) திறந்த மனதுடன் திராவிடருடன் கைகோர்த்து தோளுடன் தோளாய் தென்னாட்டினரின் முன்னேற்றத்துக்குப் பாடுபடவும் உபயோகிக்க பார்ப்பனர்களுக்குத் திறனுண்டு.

பிறர் தயவைக்கொண்டு, ஒருவரை ஏமாற்றி அடையும் வெற்றி சீக்கிரமே அழியக்கூடியதாகும். நட்பால் கிடைக்கும் வெற்றி வேறொன்றி நிலைக்கும் என்பதை பார்ப்பன சகோதர சகோதரிகள் அறிந்துகொள்வது சிரமமல்ல.

வடநாட்டு முண்டமும் தென் நாட்டு சிரசும் ஒன்றுசேர்ந்து, ஒரு உருவமாகி, திராவிடரை அடக்கி வருவதென்றால் தன்மானமுள்ள திராவிடன் எவ்வளவு நாட்களுக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்கமுடியும்? அப்படியேதானிருக்கட்டுமென்றாலோ தென்னாட்டவரின் மூளையின் வலுவைத் தெரிந்துகொள்ளவாவது வட நாட்டவருக்கு ஆற்றலுண்டா என்பதே சந்தேகம். இதே தென்னாட்டு பார்ப்பனரின் இனத்தைச்சேர்ந்தவர் எனவே கொண்டாடப்பட்டுவரும் வடநாட்டு பார்ப்பனருக்காயினும் உண்டா என்றுதான் கேட்கின்றோம். சிறிதளவேனும் இருந்திருப்பின் நாடு இக்கதிக்கு வந்திருக்குமா என்றே யோசித்துப் பார்க்குமாறு கை கூப்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எம் மதிப்பிற்குரியவரும் தற்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாயுமிருந்து வருகிறவருமான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தென்னாட்டு, தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களையுடைய, தமிழையே தாய்மொழியாகக்கொண்ட ஒரு பார்ப்பனர்.

இவரை நாம் நேரில் அறியோம். கிட்ட நெருங்கிப் பார்த்ததுவும் கிடையாது. புகைப்படங்களில் கண்டதுண்டு. பத்திரிகைகளில் படித்ததுண்டு. அவ்வளவுதான். அரசியல் கொள்கைகளில் எமக்கும் அவருக்கும், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டிலும் சற்று அதிகமாகத்தானிருக்கும். இதே சென்னையில் பிரதமராயிருந்த காலத்தில் அவர் கொண்டுவந்த சட்டங்கள் பலப்பல ஏழைகளின் க்ஷேமத்தையும் நாட்டின் நலனையும் கருதி அவைகளையெல்லாம் எதிர்க்கவேண்டியவர்களானோம். அவர் நுழைத்த, இப்போதும் அமுலுக்குக் கொண்டுவந்துகொண்டிருக்கும் திட்டங்களுக்கு பலமான எதிர்ப்பு இருந்து வருகிறதை உலகமே அறியும். ஆயினும் உண்மையை ஒத்துக்கொள்வது எம்முடைய முதற்கொள்கையாகும். ஒருவரை விசேஷித்துப் பேச வேண்டிய அவசியம் எமக்குக்கிடையாது. ஒருவரின் தயாதாக்ஷண்யத்திற்கும் கட்டுப்பட்டிருக்கவில்லை. பட்டம் பதவி ஆசிக்கவில்லை. வகிக்கத் திறமையும் இல்லை. மக்களின் க்ஷேமமே எங்களுடைய குறிக்கோள். நாட்டின் நலனே எங்களுடைய லக்ஷியம். இவை கைகூட எத்தகைய தியாகமும் செய்யத் தயாராகவே காத்துக் கொண்டிருக்கிறோம், பணிசெய்ய முன்வந்துவிட்டோம் என்றால் அது உண்மையினும் உண்மை என்பதை நாங்கள் சொன்னால் தற்புகழ்ச்சியாகலாம்.

சகல விசேஷத்துக்கும் எல்லாரின் மதிப்புக்கும் உரியவராயிருக்கும் இதே இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஓரிரண்டு வருஷங்களுக்குமுன் எவ்வித கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்கும், சேவலங்களுக்கும் உள்ளாக்கப்பட்டார் என்பதை எவரும் மறந்திருக்க முடியாது. அவை யாது என விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியம் இங்கெழவில்லை. இராஜகோபாலாச்சாரி அவர்கள் பேரும் புகழும் வாய்ந்த ஒரு வக்கீலாக தொழில் புரிந்து ஆயிரக்கணக்கில் சம்பாதித்து வந்தும், தேசீயத்தின்பேரால் அத்தொழிலை உதறித்தள்ளி, காங்கிரசுக்குள் நுழைந்து, பல முக்கிய பதவிகள் வகித்து, தேசத்திற்காக சிறைச்சாலை பலமுறையும் சென்று, பல கஷ்ட நஷ்டங்கள் பட்டும், காங்கிரசுக்காக பாடுபட்டுவந்த ஒருவர் ஒரு சிறு அபிப்பிராய பேதத்தாலும் தன்னுடைய கொள்கையே சரியெனக் கண்டதும் அக்கொள்கையை எவ்வளவும் விட்டுக்கொடுக்க முடியாதவராயும், முடியாதெனவும், வெளிக்கெடுத்துச் சொல்லி மனதில் படியவைத்து, தலைவர்களை திருந்தச்செய்து, வரவிருந்த பெரியதோர் ஆபத்தை நீக்க அதுவே சரியான வழியென உறுதிகொண்டு, "காங்கிரஸில் ஒரு சாதாரண அங்கத்தினர் பதவியும் வேண்டிலேன்" என்று வெளியேறியதிலும் மக்கள் அவரை வெறுத்ததிலும், தலைவர்கள் செவிசாய்க்காதிருந்ததிலும், பின் ஏற்பட்ட பயங்கர சம்பவங்களிலிருந்தும், "அப்படிச் செய்திருந்தால் இப்படியெல்லாம் ஆயிருக்காதே" என வாய் விட்டு பலபேர் புலம்பியதிலிருந்தும் இதே இராஜகோபாலாச்சாரியாரை ஒருதீர்க்கதரிசி என்றுக் கருதுவதா அல்லது பின்புத்தி படைத்தமட்ட ரக அரசியல் வாதி யென்று கருதுவதா என்பதை மக்களே தீர்மானிக்கட்டும். அத்தகைய தீர்க்கதரிசிக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், விதத்திலும், கணக்கிலும் எண்ணிற்கடங்கா.

அப்படி எதிர்த்தவர்கள் யார்: பார்ப்பன சகோதரர்களா. அல்லது பல்வேறு இயக்கங்களுக்கும் கழகங்களுக்கும் சமமந்தப்பட்டவர்களா? இல்லவே இல்லை. ஆனால் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்த திராவிடர்களே யல்லாது வேறொருவருமல்ல. இவர்களின் பேரில் நாம் எத்தகைய பழியும் சுமத்தத் தயாராயில்லை. இராஜகோபாலாச்சாரியாரை அல்ல, ஆனால் கொள்கையை எதிர்க்க வேண்டிய அவசியத்துக்குக் காரணம் காங்கிரஸின் பேரில் வைத்திருந்த அன்பும் பற்றுதலுமேயாகும். அதே காரணத்தின் பேரில்தான் காங்கிரஸ் தோழர்களில் சிலர், உண்மையை உணர்ந்துகொள்ளாது, இன்றைக்கும் திராவிட கழகத்தையும் இதர ஸ்தாபனங்களையும் எதிர்த்து வருகிறார்கள். இவர்களுக்கு காங்கிரஸின் பேரில் இருக்கும் பற்றுதலை குறை கூறவுமில்லை. நாம் எவ்விதத்

தும் இழிவு படுத்தவில்லை. ஆயினும், பக்தி என்ற பெயராலும் பிரார்த்தனை என்ற பெயராலும், மாரியம்மனுக்கென்றும் காளியம்மனுக்கென்றும், மாகாளிக்கென்றும், இன்னும் பல்வேறு துஷ்ட தேவதைக்கென்றும் நாக்கையும், மூக்கையும், கன்னங்களையும், கைகளையும், கால்களையும், உடம்பையும் ஊசிகளாலும், ஆணிகளாலும், இன்னும் பயங்கர ஆயுதங்களாலும் வதை செய்து கொள்ளும் தீவிரத்தைக் காட்டிலும் நம் காங்கிரஸ் நண்பர்கள் கொண்டிருக்கும் தீவிரம் அதிகமல்லவென்பதை மாத்திரம் சொல்ல விரும்புகிறோம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நெருப்பில் நடப்பவர்களும் நெருப்பைக் கையிலேந்திச் செல்பவர்களும் இக் காங்கிரஸ் அனுதாபிகளுக்கு எவ்விதத்தில் சளைத்தவர்கள்? என்றே கேட்கின்றோம்.

காங்கிரஸ் திராவிடத் தோழர்களே! இவ்வாறு பாட்டம் செய்பவர் பார்ப்பனர்களில் எவரேனும் உண்டா? நீங்கள் கண்டதுண்டா? அல்லது கேள்வியாவது பட்டதுண்டா? அல்லது அத்தகைய கோயில்களில் பார்ப்பனர்கள் பூசாரிகளாகவாவது அமைந்திருப்பதைக் கண்டிருக்கிறீர்களா? இதுதான் கதி வேறு விஷயங்களிலும், அரசியல் நாடகத்திலும், உலக விவகாரங்களிலும், எவ்வளவு ஜாக்கிரதையாகவும் புத்திசாலித்தனமாகவும் பார்ப்பனர் நடந்துகொள்கிறார்கள் என்பதைத் திராவிட சகோதர சகோதரிகள் இனியேனும் கவனித்தல்வேண்டும். காலத்தை வீணாக்காமல் எதிர்காலத்தை நிர்ணயித்தல்வேண்டும். இதைச்செய்யாவிடின் இனியும் ஏமாந்த சோணகிரிகள் என்றே பலபேராலும் அழைக்கப்பட்டு வரவேண்டியேற்படும் என்பதை சாதி சமய வேறுபாடின்றி ஒவ்வொரு தென் இந்தியரும் மனதில் இருத்தல்வேண்டும்.

இராஜகோபாலாச்சாரியார் தான் சொந்த தனிப்பட்ட, காங்கிரசுக்கு விரோதமெனக் கருதப்பட்ட கொள்கையுடன் வெளி வந்தார். காந்தியாரிடம் விரைந்துசென்றார். வாதத்தை வழக்கறிஞர் என்ற தோரணையில் வல்லமையுடன் விவரித்துக்காட்டினார். புட்டுப் புட்டுக் காட்டினார். என் செய்வர் காந்தியார், உலக அரசியல் தந்திரி நிபுணரல்லவா அவர்! ராஜனுக்கும் சொலல் வேண்டாம், மந்திரிக்கும் சொல்ல வேண்டாம் என்றே இராஜகோபாலாச்சாரியார் தெரிவித்த யோசனையை ஆராய்ந்து, ஆராய்ந்து அனுபவிக்க ஆரம்பித்தாரேயொழிய, தான் கொண்ட கருத்தை வாய் விட்டு வெளி சொன்னாரில்லை. யதார்த்தத் தென்னிந்திய மக்கள் காந்தியாரின் அபிப்பிராயத்தைத் தெரிந்து, அதன்படி நடந்து கொள்ள முடியாதவர்களானார்கள். இங்கிலை பிற வட நாட்டுத் தலைவர்கள் என்போருக்கு சாதகமேயாயின. இருந்த விஷயத்தையும் ஏற்படவிருந்த ஆபத்துகளையும் முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடியா வடநாட்டுத் தலைவர்கள் இராஜகோபாலாச்சாரியாரின் பேரில் பழி சுமத்தலாயினர். வடநாட்டுத் தலைவர்களின் பேரிலும் அவர்களின் தாபனமாகிய காங்கிரசின் பேரிலும் கொண்டிருந்த அபரிமித பக்தியின் காரணமாகவே உண்மையையும் நிலைமையையும் அறிந்துகொள்ள சக்தியற்றவர்களாகி இராஜகோபாலாச்சாரியார் அவர்களை காங்கிரஸ் திராவிடத் தோழர்கள் ஏசவும், தாக்கவும் ஆரம்பித்தனரேயொழிய அவ்வித அடாத செயலுக்கு, உண்மையாகவே காரணமும் கிடையாது, நியாயமும் எள்ளளவும் கிடையாது. இந் நிலைமையை அறிந்திருந்தவர் காந்தியாரேயாவர். அறிந்தும் மௌனம் சாதித்தல் அர்த்தம் இல்லாமலில்லை. அதை அறிந்துகொள்ளாவிடின் அது நம் பிசகேயாகும். வட நாட்டின் மூளைக்கு எட்டுவதும் கஷ்டமே. காந்தியாரின் சம்மதமும் ஆதரவும் தனக்கிருக்கிறது என்று இராஜகோபாலாச்சாரியார் எண்ண அதே சமயத்தில் வட நாட்டுத் தலைவர்கள் இராஜகோபாலாச்சாரியாரின் கொள்கையை காந்தியார் ஒத்துக்கொள்ளவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்க, தென்னாட்டவர் வடநாட்டுத் தலைவர்களின் அபிப்பிராயத்தை ஒட்டி ஆச்சாரியாரை எதிர்க்க, ஆங்கிலேயரின் பித்தலாட்டமும் ஜின்னாவின் சண்டித்தனமும் ஓங்கிநிற்க கொள்ளை, களவு, கொலை, கற்பழித்தல், மத மாற்றம் முதலிய சம்பவங்கள் கட்டு திட்டமின்றி தலைவிரித்தாட, இடைக்கால சர்க்காருக்குப் பின் குக படலமும் நடந்தேறியது. ஆச்சாரியாருக்கு எதிர்ப்புகள் தென்னாட்டில் அது சமயத்தில் பலவிருந்தும் ஆச்சாரியாரின் திறனையும், புத்தி சாதுர்யத்தையும், நுட்பத்தையும், அனுபவத்தையும், முன் யோசனையும் நன்கறிந்தும் வாய் மூடியிருந்த காந்தியார், "இனி சும்மா இருத்தல் கூடாது. உண்மையை அறிந்து அதன்படி நடந்துக் கொள்ளத் தவிர்ந்துவிட்டார்கள்" எனவே கொஞ்சமும் தாமதியாமல் ஆச்சாரியாரை வரவழைத்து மந்திரி சபையில் இருக்கச் செய்ததும் அதை யடுத்து, மிகவும் நெருக்கடியான சமயத்தில் பெங்காலுக்குக் கவர்னராக நியமித்ததும், கடாசியாக, பட்டே பட்ட ஆசாமிகள் பலரும் இருக்க, அவர்களை யெல்லாம் அலட்சியம் செய்து, லார்டு மௌண்டு பேட்டன் லண்டன் சென்றதால் காலியான கவர்னர் ஜனரல் பதவியில் ஆச்சாரியாரை தற்காலீக கவர்னர் ஜெனரலாக நியமித்ததும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அத்தாக்ஷியாக, நாட்டைத் துண்டு போடமுடியாதென்று தெரிவித்து, தலைவர்கள் அது சமயத்தில் நவகாலியிலிருந்த காந்தியாரின் யோசனைக்குப் போக "ஆபத்து கொடுத்துவிடுங்கள். அன்னியன் எப்படியாவது விலகட்டும்" என்று தலையிலடித்துச் சொல்லியனுப்பியது ஆச்சாரியாரின் யோசனையை ஆதியிலேயே ஏற்றுக்கொண்டும் பிறரைப் பரீட்சிக்கும் வகையிலேயே சும்மாயிருந்தார் எனப் புரியவில்லையா என்றே கேட்கின்றோம். தென்னாட்டாரால் அவமதிக்கப்பட்டும், வடநாட்டாரால் வக்கணை பேசப்பட்டும் வந்த ஒரு நபரை காந்தியார் மாத்திரம் போற்றிவந்த காரணமென்ன? இந்தியர் என்ற காரணத்தாலா? அல்லது பார்ப்பனர் என்ற காரணத்தினலா? அல்லது சமர்த்தி என்ற காரணத்தாலா? என்று யோசிக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம். தென்னாட்டு மூளைக்கு மதிப்புக் கொடுத்து, நாட்டின் நலனை அனுசரித்து போற்றியும் புகழ்ந்தும், ஆதரித்தும், அனுசரித்தும் வந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இது தவிர தென்னாட்டினரின் பேரில் காந்தியாருக்கு உண்மையான அன்போ, ஆதரவு காட்ட வேண்டுமென்ற எண்ணமோ, சமத்துவ உணர்ச்சியோ, கொஞ்சமேனும் இருந்திருந்தால், காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு தலைவர்களை நியமிக்கும் அலுவலைத்தானே, சர்வாதிகாரமாக வைத்திருந்தும், இந்த இருபது வருஷங்களாக ஒரு தென்னிந்தியரையாவது நியமிக்காமல் இருந்திருப்பாரா என்பது ஒவ்வொருவரும், பார்ப்பனரும் திராவிடரும் உள்பட யாவரும் மிகவும் ஊன்றி கவனிக்கவேண்டிய விஷயமன்றோ? வட நாட்டான் தென்னாட்டான் என்ற பாகுபாடில்லாவிடில் இச் செய்கைக்கு, பக்ஷபாதத்துக்கு வேறென்ன காரணமாயிருக்கக்கூடும் என்றே கேட்கின்றோம்.

உலகப் புகழ் காந்தியாரே இவ்விதமென்றால் மற்ற சாமரன் யாரைப் பற்றி யோசிப்பதிலோ, குறை கூறுவதிலோ என்ன பலன் ஏற்படப் போகிறது? புது டெல்லிக்கு ஒரு தென் இந்தியரின் பெயரையா சூட்டுவார்கள்? மனமும் வருமா? ஆயினும் பார்ப்போம் நடக்கவிருக்கும் நாடகத்தை. தமிழ் நாட்டு மக்களே! தலைவர்களே! பத்திரிகைகளே! நீங்கள் என்ன செய்யக் காத்திருக்கிறீர்கள்? தூங்காதேயீர்கள். தூங்காதேயீர்கள். புது டெல்லிக்கு ஒரு தென் இந்தியரின் பெயரைக் கொடுத்து, அப்பெயரால் தென் இந்தியாவையும் வட இந்தியாவையும் ஒன்று செய்யுங்கள்.

# தென்னாட்டவரே!

வந்து விட்டது மோசம். உஷாராகுங்கள். உங்கள் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்திருங்கள். நம்முடைய மானம் பறி போகிறது. தென்னிந்திய ஆரியருக்கும் திராவிடருக்கும் இருக்கும் சச்சரவுகளெல்லாம், பிரத்தியேக, குடும்ப தகராறுகள். இவைகளுக்கும் வடநாட்டாருக்கும் எத்தகைய சம்மந்தமுமில்லை. இவைகளைப் பயன்படுத்திக் கொள்வதும் நாம் சும்மா இருப்பதும் வடிகட்டின அசட்டுத்தனமாகும். அதனால், தென்னிந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்ற, தென்னிந்தியரின் ஒற்றுமையை எடுத்துக்காட்ட, வட நாட்டவருக்கு நல்லதோர் புத்தியைப் புகட்ட, வடநாட்டாரின் நுழைவாலேயே தென்னிந்திய ஆரியரும் திராவிடரும் கீரியும் பாம்புமாய் இருக்கிறோமென்பதை விளக்கிக் காட்ட, ஹைதராபாத் கலவரம் ஏற்பட்ட காலத்தில் திராவிடக் கழகத்தார் தங்களுடைய போராட்டத்தை நிறுத்திக் கொண்டதையும், தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் வித்தியாசம் ஏற்படுங்காலத்தில் நம் சேவை தென் இந்தியாவுக்கென்பதையும் இந்தியாவுக்கும் பிற வெளி நாடுகளுக்கும் பகைமை மூண்டிடின் நம் சேவை இந்தியாவுக்கே என்பதையும் நம்மைத் தாக்கிவரும் காங்கிரஸ் தோழர்களும், எல்லா விஷயங்களிலும் நம்மை எதிரிகளாகக் கருதிவரும் பார்ப்பனர்களும், கிண்டல் செய்து வரும் தன்மானமில்லா சுயநலப் பத்திரிகைகளும், அரசியல் இன்னதுதானென இன்னும் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கும் மூட பக்தர்களும்' நம்மைக் ஏளனம் செய்து வரும் வட நாட்டார்களும், சந்தேகமறத் தெரிந்து கொள்ள தென்னாட்டினர், ஒவ்வொருவரும், எல்லாரும், அவர் எச்சாதியைச் சேர்ந்தவராயினும் சரியே, எக்கக்ஷியைச் சேர்ந்தவராயினும் சரியே, எக்கொள்கையை உடையவராயினும் சரியே, ஏகமனதாக தோழர் பட்டாபி சீத்தாராமையாவையே ஆதரித்து, அகில இந்திய காங்கிரசுக்குத் தலைவராக்குங்கள்.

ஆக்குங்கள். கண்டு களியுங்கள்.

வெற்றி நமதே.

வீழ்க வடநாட்டு ஆதிக்கமும் சுரண்டலும் !!!

"குண்டாந்தடி"

# செய்யவேண்டுவது என்ன?

இது நமது சர்க்கார், ஆள்பவர்கள் நம் இனத்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் எவ்வளவோ மகிழ்ச்சியும் மன பூரிப்பும் ஏற்படுகிறதுதான். அந்நியர் அடிமை ஆட்சியிலே, ரூபாய்க்கு ஆறு படி அரிசி வாங்கி உண்பதைவிட இப்போது ரூபாய்க்கு அரைப்படி அரிசி வாங்கி யுண்பது, மனத் திருப்தி தருகிறதென்பதை நாட்டுப்பற்றுள்ள யாரும் மறுக்க முடியாதுதான். ஆனால் இந்த மனத்தளவு திருப்தி நீடித்திருக்க முடியுமா? அரைப்படி அரிசியோ அல்லது ரேஷன் கடை தவிட்டரிசியோ கிடைக்கும் நிலைமை நீடித்தால், வயிற்றுக்குத் திருப்தி ஏற்படுமா? உடல் உரம்பட்டு நிற்க முடியுமா? பசி வந்திடப் பத்தும் பறந்து போகுமே! அப்போது நாட்டுப் பற்றும், தியாகப் பண்பும் அந்த பசித்த வயிற்றின் கண்களுக்குத் தெரியுமா என்பதை ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டியது கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. எனவே மக்கள் பிரதிநிதிகளென்பவர்களின் உடனடியான கடமை, இந்தப் பட்டினி "யுகம்" அதிக காலம் நீடித்திருக்காமல் தடைப்படுத்துவதேயாகும். "வடக்கு நோக்கித்வமான தவம் கிடந்தாயிற்று". ஆனால் நமது தலைமை சர்க்காரான தக்ஷணாமூர்த்தியோ, போதுமான அளவுக்குக் கருணை சாதிக்க வில்லை என்றோ கருணை சாதிக்க வியலாத நிலைமையிலிருக்கிறதென்றோ, கூறி, கை விரித்து விடுவது பொறுப்புள்ளவர்களின் செய்கைய" காதென்பதையும்நாம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. கட்டுப்பாடும் பங்கீடும் இருந்த காலத்திலும் போதிய பலன் கிடைத்ததென்று யாரும் நெஞ்சின் மேல் கை வைத்து சொல்ல வியலாது. கட்டுப்பாடும் பங்கீடும் ஓரளவுக்கு நீக்கியதும்; "உள்ளதும் போச்சுதடா நொள்ளைக் கண்ணு" என்ற நிலைமைதான் ஏற்பட்டது. எனவே மீண்டும் கட்டுப்பாடும் பங்கீடும் நாடெங்கும் ஏற்படுத்த வேண்டிய வலுக்கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இத்தகைய "சடு குடு" விளையாட்டு எத்தனை காலம் நடத்த முடியும்? இந்த உணவும் துணியும் தேடி அளிக்கும் வேலையில் மாத்திரம் ஆட்சியாளர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தால் மற்ற நாட்டு வளப்ப சீர்திருத்தங்களை நிரந்தர ஆக்க வேலைகளைக் கவனிப்பது எந்த யுகத்தில்? காகிதத்திலே போட்டு வைத்துக் கொண்டிருக்கும் ஐந்து ஆண்டுத் திட்டமும் பத்தாண்டுத் திட்டங்களும் என்ன கதியாவது? இந்தத் தொல்லைகளுடன் மொழிப் போராட்டத்தையும், மதுவிலக்கு நஷ்டத்தையும் வேறே வலிய விலைக்கு வாங்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றனவே. சர்க்கார் எல்லா மக்களின் பிரதிநிதி. எல்லாரின் நலனுக்கும் பாடுபட வேண்டியவர்; பாதுகாப்புச் செய்ய வேண்டியவர். இதில் வேற்றுமை காட்டலாகாது. ஆனால் சர்க்கார் போகும் போக்கோ இப்படியில்லையே. வர்த்தக இனத்தின்; முக்கியமாக சிறு வியாபாரிகளின் வயிற்றிலடிப்பது போன்றல்லவா இருக்கிறது; சர்க்காரின் கட்டுப்பாடும் பங்கீடு முறைகளும். பொதுநலன் கருதி ஒரு பகுதியினரை சட்டுப்படுத்த வேண்டுமென்ற நடுநிலைமை நீதியை நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்தத் தடை, நீண்ட காலம் நீடித்தால், வர்த்தக இனமே அடியோடு நசித்துப் போனால் என்ன செய்வது என்று யோசிக்கத்தானே; பயப்படத்தானே வேண்டியிருக்கிறது. சர்க்கார் நிரந்தரமாக இந்த சில்லறை வியாபாரத் தொழிலை நடத்தி வர வியலுமா என்று, நடந்த வரலாற்றையும் நடப்பு வரலாற்றையும் எண்ணிப் பார்த்து தீர்மானிக்க வேண்டும்.

சர்க்கார், இந்த 'சர்தைக் கடை' பேரத்தில் நீடித்த பங்கு கொள்வது புத்திசாலித்தனமாகாதென்றே அனுபவசாலிகள் தீர்ப்புக் கூறுவார்கள், எனவே சர்க்கார், செய்ய வேண்டியதெல்லாம், ஒன்று விவசாயத்தை விருத்தி செய்து விளைச்சலை அதிகரிக்க வழியும் உதவியும் செய்ய வேண்டும். இது உடனடியாக சாத்தியமாகா விட்டால், அந்நிய நாடுகளிலிருந்து எவ்வகையிலாவது, தான்யங்களை வரவழைக்க, உரிய முறையில் பேரம் பேசி, தேவையான தான்யங்கள் இறக்குமதி செய்யவேண்டும். சர்க்கார் நேர்முகமாக இத்துறையில் வெற்றிபெற வியலா விட்டால் (வர்த்தக ரகசியம் தெரிந்திராத நாற்காலி உத்தியோகஸ்தர்களே இந்த வியாபார பேரத்திற்காக அனுப்பப் படுவதாகத் தெரிவதால்) இந்த பேரத்தை அனுபவசாலிகளும் நம்பகமும் நாட்டு நலக் கருத்தும் உள்ள வர்த்தகர்கள் மூலம் நடத்தலாம். இவ்விதம் செய்வதில் இந்த வர்த்தகாகள் இன்ன லாபம் வைத்து இன்ன விலைக்குத்தான் விற்குக வேண்டும் என்று கண்டிப்பான ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். தவறினால் தயாதாட்சண்யமின்றி கடுந்தண்டனை—பிரதமர் நேரு சொல்லி வைத்திருப்பது போல மரணதண்டனையும் விதிக்கலாம். இதை விடுத்து, தொழிலாளர் வேலை செய்யவில்லை என்று முதலாளியே எல்லா வேலைகளையும் தன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு செய்தால் அந்தக் கஷ்டத்தை எத்தனை காலம் சகிக்க முடியும். வேலை வாங்குவதுதான் முதலாளியின் திறமைக்குச் சான்றேயன்றி, தொழிலாளியின் வேலையைத் தான் செய்வது அசட்டு அப்பாவித்தனம் அல்லது கஞ்சத்தனம் அல்லது முதலாளிக்குத் திறமையில்லை என்றுதான் உலகோர் எண்ணச்செய்யும்.

உலக மகா யுத்தத்திலே உலகெங்கும், அதுவும் போர்க்கள நாடுகளிலே உணவுப் பஞ்சம் கோர தொத்து நோய் போலத் தாண்டவமாடிற்றல்லவா? அப்போது அந்நாட்டார் இக்கஷ்டத்தை எவ்விதம் சமாளித்தார்கள் என்பதை சற்றே எண்ணிப் பார்க்கும்படி ஆட்சி முகாமிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஜெர்மனியிலே, மரத்தூளையும் ரொட்டி ஆக்கி உண்ண வில்லையா? பர்மாவிலே போர் நடத்திய அந்த ஜப்பானியக் குள்ளர்கள் ஏதோ சில மாத்திரைகளைத் தின்று விட்டு நாட்கணக்காக உரத்தோடு, ஊக்கத்தோடு சண்டையில் ஈடுபட வில்லையா? நம் நாட்டில் இந்த மூலிகைகளுக்குப் பஞ்சமா? திருப்பதி மகந்து ஒருவர் ஏதோ இலையைத் தின்று கொண்டே அன்ன ஆகாரமின்றி பல்லாண்டுகள் உயிர் வாழ்ந்திருந்ததாகக் கூறுவது பக்தர் கட்டுக் கதையா? கந்த மூல மூலிகைகளின் குண ரகசியங்களை அறிந்த மருத்துவர்கள் யாரும் இந்த மூலிகைகளின் ரகசியத்தை மறுக்கத் துணியமாட்டார்கள். மற்றும் நம் நாட்டிலே, கிராமந்திரங்களிலே, சோற்றுக் கற்றாழையில் கிடைக்கும் சோற்றையும், சப்பாத்திக் கள்ளிப் பழத்தையும் மற்றும் பலவகை காட்டுக் கனிகளையும் உண்டு பசியாறுபவர்கள் கோடான கோடியிருக்கின்றனர். மலைவாசிகளும் புல்லரிசிகளை உண்டு வாழ்கின்றனரே! சர்க்கார் காட்டிலாகாக்காரர்கள் விவசாய இலாகா சிப்பந்திகள் இத்துறைகளில் கவனம் செலுத்தி இந்தக் காட்டுக் கனிச் செல்வங்களை, கிழங்குகளை சேகரித்து, ஆஸ்திரேலியா செய்வது போல் டப்பா உணவுகளாக்கி ஏழைகளுக்கு உதவலாமே. மக்காச் சோளம் உண்பவர் களில்லை என்று கவலைப்படும் நிலைமை ஏன் ஏற்பட வேண்டும். அதை ரொட்டிகளும் பிஸ்கோத்துகளும் மற்றவகை உணவுப் பண்டங்களுமாக்கி விற்க சர்க்கார் செய்திருந்தால் அல்லது இந்தத் தொழிலை சர்க்கார் மேற்கொண்டு நடத்தியிருந்தால் ஏழைகள் வயிறு குளிர வழி பிறந்திருக்குமல்லவா? காட்டிலே கிடைக்கும் கோரைக் கிழங்கும் பலவகை வள்ளிக் கிழங்குகளும் நல்ல சத்தான ஆகாரமாயிற்றே. இவற்றை பிஸ்கோத்துகள் செய்து விற்றிருந்தால், ஏழைகள் உடல் வளம் பெற்றிருக்குமே. சர்க்காரும் தான்யங்களில் மாத்திரம் கவலை கொண்டு வீண் தொல்லையை விலைக்கு வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காதே. எனவே இப்போது நமக்கு வேண்டுவது என்ன? வயிரத்தை வட்டிலாக்கும் விஞ்ஞானியல்ல. ஆனால் மணலை அப்பமாக்கும் திறமைசாலிதான் தேவை. ஆகாயத்திலே ஆறுயிரம் மைல் வேகத்தில் பறக்கும் விமானமல்ல. ஆனால் பசியால் அலறும் வயிறு குளிரச் செய்ய, கல்லையும கற்கண்டாக்கச் செய்யும் ரச வாதியே தேவை. மண்ணைப் பொன்னுக்கும் ரசவாதியல்ல. ஆனால் மண்ணை அல்வாவாக்கும் திறமைசாலி தான் இப்போது தேவை. உலகெல்லாம் ஒளி மயமாக்கும் மின்சாரத் திட்டமல்ல. கல்லையும் மண்ணையும் மரத்தையும் மட்டையையும் உணவு பண்டமாக்கும் மின்சாரத் திட்டம் தான் இப்போது இன்றியமையாதது. எனவே, சர்க்கார் மேலலங்கார சுய விளம்பரத் திட்டங்களை ஒத்திவைத்து முதலில் இந்த வயிற்றுராதனை திட்டங்களின் துறையில் திரும்ப வேண்டுமென்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.

---

ஆசிரியருக்குக் கடிதம்:

## "மீன் பிடிப்போரும் 4 அவுனஸ் அரிசியும்"

சென்னை, அக். 19—

"சென்னை தவிர மற்ற ஜில்லாக்களில் மக்களுக்கு 4 அவுனஸ் அரிசி விதம் கொடுக்கப்படுகின்றது. இதனால் கடற்கரை யோரமுள்ள மீன பிடிக்கும் மக்கள் அடையும் கஷ்டம் சொல்லமுடியாது. வாரத்தில் கொடுக்கும் அரிசியானது 2 நாளைக்குப் வராது. மீதி 5 நாட்களுக்கும் ரூ. 1-4-0 முதல் 1-8-0 வரையில் திருட்டு அரிசி வாங்க நேரிடுகின்றது. பெரும்பாலும் அநேக மக்களால் அதுவும் முடிவதில்லை. பசியின் கொடுமையால் வாடுகின்றனர். இந்த 4 அவுன்ஸ் அரிசி என்பது 3 நபர்கள் (Adult) உள்ள ஓர் வீட்டிற்கு ஓர்படி அரிசியாகுமென்றால் கடற்கரை போரமுள்ள மீன் பிடிக்கும் மக்களின் கதி என்னவாகும்? கடலில் செல்லும் போதும் கஞ்சி கொண்டுபோக வேண்டும். இல்லையேல் அங்கு பசியின் கொடுமையால தொழில் செய்ய முடியாது. கடலைவிட்டு வந்ததும் பகலும் இரவும் வயிறார உண்டால்தான் மறுநாள் வேலைக்குப் போகமுடியும். இல்லையேல் கடலுடன் போராடி கடலில் சென்று மீன்பிடிக்க சக்தியிராது. இதை அறியாதார் யாரும் இலர்.

ஆகவே இம் மக்களுக்கு சென்னையில் கொடுப்பதுபோல 8 அவுன்ஸ் அரிசியாவது கொடுத்து காப்பாற்றமாறும் இல்லையேல் இவர்கள் தொழில் மிகவும் பாதிக்கப்படுமென்றும் பட்டினிசசாவு ஏற்படுமென்றும் அரசாங்கத்தை எச்சரிப்பதோடு உடனடியாக இவற்றில் தலையிட்டு ஆவன செய்யுமாறு வணக்கமாய் கேட்டுக்கொளகிறேன்."

கே. என். ஜெயராம்,
செங்கல்பட்டு ஜில்லா,
மீன் பிடிப்போர் சங்க அமைப்பாளர்

---

## உணவு கட்டுப்பாடு மீண்டும் அமுல்

### சர்க்காரின் "தோல்வி?' விளக்கம்

பங்கீடு அளவு அதிகரிக்குமா?

சென்னை, அக், 18—

கன்ட்ரோல் எடுபட்டதால் விலைவாசிகள் ஒரே யடியாக அதிகமாகி விட்டன. இதை தடுக்கமுடியாமல் போய்விட்டது. இதை கவனித்து ஜனங்களுக்கு உதவ கன்ட்ரோலை மீண்டும் அமுலுக்கு கொண்டுவர இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது" என்று இன்றுகாலை பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் சென்னை சர்க்கார் உணவு மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கூறினர்.

பணப்பெருக்கத்தைகுறைக்கவும். இருக்கும் உணவு பொருள்களை எல்லோருக்கும் சமமாக விநியோகிக்கவும் இந்த முறைகையாளப்படுகிறதென்று மந்திரி சொன்னர்.

அரிசியை பாலிஷ் செய்வது தடை செய்யப்படுமென்றார். உற்பத்தியாளர் விலை நிர்ணயம் சம்பந்தமாக சர்க்கார் நோக்கத்தை விளக்கிக் கூறினர்.

"உற்பத்தியாளர்களுக்கு போனஸ் கொடுப்பதாக அறிவித்த சர்க்கார் உத்தரவுகள இப்பொழுது ராத்தாகி விடுகின்றன. இனிமேல் போனஸ் கிடையாது. 1948 அக் 1-ந் தேதிவரை வழங்கப்பட்ட எரு கூப்பன்களுக்கு டிசம்பர் 31-ம் தேதிக்குள் எருவோ, பணமோ வாங்கிக் கொண்டுவிட வேண்டும்" என்றும், உற்பத்தியாளர்களுக்கு கண்ட்ரோல் விலையில் ஜவுளி, கெரோசின் கொடுக்கப்படுமென்றும், இதனால் அவர்கள் செலவு குறையுமென்றும் தெரிவித்தார்.

## ஏப்ரல் முதல் அதிக ரேஷன்

"குறைக்கப்பட்டுள்ள ரேஷனை 10 அவுன்ஸாக 1949 ஏப்ரலிலிருந்து அதிகமாக்க முடியும் என்று நம்புகிறேன்" என்று இன்று உணவு மந்திரி டாக்டர் ராஜன் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் சொன்னதாவது:—

அறுவடை காலம் டிசம்பரில் வந்து விடுகிறது. கொள்முதல் தீவிரமாக நடக்கும். உபரியாகவுள்ள பொருள்கள் கொள்முதல் செய்யப்படும்,

சர்க்கார் கையிருப்பு நிலைமை ஒரு அளவுக்கு வந்து திருப்திகரமானவுடன், ரேஷனை அதிகரிக்கும் விஷயம் கவனிக்கப்படும். ஏப்ரலில் 10 அவுன்ஸ் தர முடியுமென நினைக்கிறேன்.

அப்பொழுது மாகாண முழுவதிலும் ரேஷன் அமுலுக்கு வந்துவிடும்.

# கற்பனையும் :: :: காலப்போக்கும்

**சித்திரம்**

**உபாத்தியாயர்:**—அடா மண்டு! நான் என்ன எழுதச் சொன்னேன்? நீ என்னடா எழுதியிருக்காய்?

**மாணவன்:**—படத்தின் அடியிலேயே எழுதியிருக்கேனே சார். அதைக் கவனிக்காமலேயே படத்தைப்பார்த்தால்.

• • • • •

**சரி செய்கிருர் சினிமா டைரக்டர்**

**புது நடிகை:**—எளவெடுத்த டைரக்டருக்கு என்ன கேடுகாலமோ தெரியிலேயே? என்ன அப்படியா? அது சொத்தை இது சொள்ளேண்ணு அதை தொடருன் இதைத் தொடருன். ஆம்பளக்கி இவ்வளவு பதஷ்டமா! ஒண்ணும் மிச்சம் விடமாட்டான் போலிருக்கே!

**பழம் நடிகை:**—அட பைத்தியமே! ரணகளத்தில் ஒப்பாரியாவது. டைரக்டர் தொட்டாப் புண்ணியம் பெத்துப் போவேயே, தெரியுமா? ஆட்டுக்கு நோம்பு அதுக்குள்ளவா ஆயிருச்சி. இன்னும் பாரு, என்னென்ன வைபவமூண்ணு. சும்மாதானு சினிமா ஸ்டார் ஆறது!

• • • • •

**சம்பள உயர்வு**

**கணக்குப் பிள்ளை:**-ஐயா, ரொம்ப கஷ்டமாயிருக்கு; புள்ளை குட்டி வச்சிக்கினு, இந்த பஞ்ச காலத்திலே. இந்த 15-ரூபாய் சம்பளத்தை வாங்கி என்ன செய்யச் சொல்றீங்கோ? இந்த மாதத்திலிருந்து ரெண்டு ரூபாயாவது சேர்த்துக் கொடுத்தா எவ்வளவோ உபகாரமாயிருக்கும்.

**முதலாளி:**— இதே வாதாப் போச்சே உம்மிடம். எல்லாம் எனக்குத் தெரியும். அதிருக்கட்டும்; சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். இப்போ, என்ன கேட்கிறீரா கணக்குப்பிள்ளே? நாளை கிர்த்திகை, ஏதாவது நூறு சாமியார்களுக்காவது அமுதளித்தாக வேண்டும். காய்கறி சாமான் முதலியவைகளை இன்றே சேகரித்து வைத்துவிடும். அடியார்களுக்கு சில்லரையும் கொடுத்தனுப்பவேண்டும். அதனல் கொஞ்சம் சில்லரையாகவும் வைத்துக்கொள். அம்பது ரூபா சில்லரை இருந்தாலும் போதும். அப்புறம் எப்படியாவது பார்த்துக் கொள்வோம்.

**கணக்குப்பிள்ளை:**—தர்மத்தோட தர்மமா என்னையும் கொஞ்சம் கவனிச்சா எவ்வளவோ கஷ்டநிவர்த்தியாகும். மன்னிக்கணும். பட்னி, பட்னி, பட்னிண்ணு எத்தனை நாளைக்குக் கிடக்கிறது?

**முதலாளி:**—முருகா, முருகா! கவனிப்பதாகச் சொன்னேனே. இரண்டு மூன்று மாதங்கள் போகட்டும். ஒரு ரூபாயாவது சேத்திக் கொடுக்கிறேன். என்னசெய்யறது! கணக்குப்பிள்ளே, கொடக்கூலி சரியா வரதில்லே. வரவேண்டிய வட்டிப் பணங்களோ நிலுவை. பயிரும் சுகமில்லே. எல்லாம் உமக்கும் தெரிஞ்ச விஷயந்தான். இப்படியெல்லாம் இருக்க சம்பளம் ஜாஸ்தி வேணுமின்ன எங்கிருந்து கொடுக்கிறது? கணக்குப்பிள்ளைகளே. எதற்கும் யோசனையும் வேண்டும். முதலில் போய் நாளை ஆகவேண்டிய காரியத்தைக் கவனியும். காலை ஒன்பது மணிக்குள்ளே எல்லாம் அடியார்களுக்கு அமுது படைச்சாகவேண்டும்.

('உடுமலை-பீரங்கி' முதல் புத்தகம்)

——: (x) :——

## துணிகரத் திருட்டு

### கர்ப்பவதியின் தீரம்.

——: (x) :——

உடுமலைப்பேட்டை 14-10-48.

இங்கரை யடுத்த கிருமமாகிய கன்னமநாய்க்கனூர் செல்லும் வழியில் கன்மைநாய்க்கனூரைச் சேர்ந்த காளிமுத்துக் கவுண்டர் மனைவி கிட்டாத்தாள் என்பவர் இன்று காலை சுமார் 7-மணிக்கு தயிர் கொண்டு வந்து கொண்டிருக்கையில் பல்லடம் தாலூக்கா தென்னம்பாளையத்தைச் சேர்ந்த (திருப்பூருக்கருகில் 1-வது மைலில் உள்ளது) முத்துசாமிக் கவுண்டர் மகன் கோவிந்தசாமி என்கிற இராமசாமி கவுண்டர், கிட்டாத்தாளை வழிமடக்கி, கழுத்திலிருந்த சுமார் 5½ சவரன் எடையுள்ள தங்க அட்டிகையை அறுத்துக்கொண்டு ஓட முயற்சித்தான். ஆனல் அப்பெண் அவனை ஓடவிடாது, கட்டிப்பிடித்துக்கொண்டு சுமார் ½-மணி நேரம் மல்யுத்தம் செய்தும் பயன்படாமல், தன்னை விடுவித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். ஆனல் அந்தப் பெண்ணும் விடாது சத்தம் போட்டுக் கொண்டு, தாத்தி, பின் ஓட அருகில் ஏர் உழுது கொண்டிருந்த கந்தசாமி கவுண்டரும் ஷெ யாரின் இளைய மகனும் திருடனைத் தாத்தியோட, சுமார் 5-மைல் சுத்தளவுக்கு உடுமலைக்கு வடக்கேயுள்ள சின்னவீரம்பட்டியில் போயும் இம் மூவரும் திருடனைப் பிடிக்க முடியவில்லை. கடசியாக கல்லாலடிப் பதாகப் பயமுறுத்தி கற்களைக்கையிலெடுத்ததும் திருடன் அதிக பிரயாசையின் பேரில் கந்தசாமி கவுண்டரின்பிடிக்கு அகப்பட்டார். திருடன் போலீஸார் வசம் ஒப்பிவிக்க பட்டிருக்கிறன். உடுமலைப் பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டரும் டிப்யூட்டி சூப்பரிண்டெண்டும் புலன்விசாரித்து வருகின்றனர். களவாடிய கவுண்டன் சப்-ஜெயிலில் காவலில் வைக்கப்ப டிருக்கிறன். கிட்டாத்தாள் 7-மாதம் நிறம்பிய கர்ப்பிணி. (ஒ—கி)

——: (o) :——

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

**உடுமலை பீரங்கி**

**சந்தா விவரம்**

**பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்,**

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 1—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 2—8—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

**ஏஜண்டுகள் தேவை.**

காரியாலயம்

33 திருவேங்கிட முதலித் தெரு, பெரியமெட்டு. சென்னை, 3.

——: (x) :——

**எல்லா ஊர்களிலும் கிடைக்கும் :**

## அறிவிப்பு-

——: (x) :——

ஏஜண்டுகள், தயவுசெய்து நிபந்தனை நமூனுக்களைக் கையெழுத்துச்செய்து அனுப்புவதுடன் நிபந்தனையின் படி அட்வான்சும் அனுப்பித்து பத்திரிகைக்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கோருகிறேம்.

வாசித்தாகவேண்டிய புத்தகம்.
"உடுமலை பீரங்கி"
(முதல் புத்தகம்)




120 பக்கங்கள்
சில பிரதிகளே பாக்கியுள்ளன.
பிரதி 1க்கு விலை அணு 12.
தபால் சார்ஜ் வேறு
பீரங்கி புத்தக நிலையம்,
33. திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை. 3.

(ஸ்தாபிதம் 1931.) டெலிபோன் 2597.

# B. R. & Sons,

33, திருவேங்கிட முதலித் தெரு, பெரியமெட்டு, சென்னை 3.

பெரியமெட்டு சப்-ரிஜிஸ்தரா ராபீசுக்கு அடுத்த மேல்புறத்துச் சந்து



- ★ எல்லாவித பத்திரங்களும் எழுதுதல்.
- ★ தமிழிலும் இங்கிலீஷிலும் டைப் அடித்தல்.
- ★ பத்திரங்களைப் பரிசோதித்து பாத்தியா பாத்தியங்களைத் தெரிவித்தல்
- ★ ரிஜிஸ்தரேஷன், ஸ்டாம்பு முதலிய தகவல்களை அளித்தல்.
- ★ சொத்துக்களின்பேரில் அடமானங்கள் ஏற்பாடு செய்தல்.
- ★ சொத்துக்களின்பேரில் கடன்கள் பெறல்.
- ★ சொத்துக்களின் கிரயங்கள், விற்பனைகள் செய்தல்.

1-ம் பக்கம் தொடர்ச்சி

## பெரியாரும் - ராஜாஜியும்

காங்கிரசின், தனிப்பெருந்தலைவராகியிருக்க முடியாது. ஆச்சாரியாரின் இனச்சார்பு போக்கும், மதச்சார்பு பண்பும் வெளிப்படாதிருந்தால் பெரியாரின் தன் மான இயக்கம் தோன்றியிருக்காது. இருவரும் இணைந்திருந்தால் இருவரும் மந்திரிகளாகவோ, அல்லது கவர்னர்களாகவோ தான் ஆகியிருக்க முடியும். பெரியாரின் சமுதாய நலம்பெருந் தொண்டிற்கு வழி ஏற்பட்டிருக்காது. ஏற்படவும் ஆச்சாரியார் வழிவிட்டிருக்க மாட்டார். பிரிந்ததினால்த்தான் பெரியார் சமுதாய நலச் சேவையில், தனிச்சிங்கமென விளங்குகிறார்.

இன்னும் இவ்விருவரின் பொதுநல ஊழியப் போராட்டத்தின் வரலாற்றை நெடுக நுணுகி ஆராய்ந்து பார்த்தால், ஒருவர் புகழ் வளர மற்றவர் எவ்விதம் உதவியாக இருந்திருக்கிறார் என்பதும் தெளிவுபடும்.

இருவரின் புகழ் உச்சிக்கோபுரத்திலிருந்து சுடர்விடதவுவியது இந்மொழியேயாகும். ஆச்சாரியார், சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகி, கட்டியாண்ட காலத்திலே, இந்திமொழியை நுழைத்து காந்தியடிகளின் நன்மதிப்பையும் வடக்கத்தியாரின் பாராட்டுதலையும் பெற்று மாவீரரானார். அதே சமயத்தில் பெரியாரும் "உனக்கு நான் இனப்பமா" என்று ஆச்சாரியாரைப் பார்த்துக் கூறுவதுபோல், இந்தி எதிர்ப்பைத் தொடங்கி, தாய்மொழிக் காப்புத் தனி வீரரானார். இந்த எதிர்ப்பு ஏற்பட்டிராவிட்டால், ஆச்சாரியாரின் 'தேசீயப் பற்று' ஒளி, இந்நாட்டிலே, குறிப்பாக வடஇந்தியாவிலே அவ்வளவு பிரகாசமடைந்திருக்காது. இப்போதடைந்திருக்கும், கவர்னர் ஜெனரல் அரியாசனத்திற்கும் வழி காட்டியிருக்காது.

எனவே இவர்களிருவரும் பிரிந்திருந்ததால் அவர்களுக்கோ அல்லது நாட்டிற்கோ எந்தவித நஷ்டமும் இல்லை. அதற்குமாறாக, அரசியலும் சமூகத்துறையும் தூய்மையடைய வழிபிறந்தது.

இப்போது நாம் விரும்புவதும் விரும்பவேண்டியதும் என்னவென்றும், இவர்கள் பிரிவு நீடித்திருக்க வேண்டும் அவரவர்கள் துறையில் அவரவர்களின் ஆதிக்கமும் தலைமைப் பதவியையும் நீடித்திருக்க வேண்டும். இந்த இருபெரும் அறிவாற்றல் மாவீரர்களின், "குஸ்தி" கைவரிசைகளால் நம்நாட்டுக்கு நம் மக்களுக்கு மேலும் மேலும் நன்மைகள் விளங்கவேண்டும். புல்லுருவிப்புலன்கள் ஒழிய வகை ஏற்படவேண்டும். சமுதாய, நாட்டு, ஊழல் பாசிகள் ஒழியு மட்டும் இவர்கள் நீடூழி நின்ற உரத்துடன் வாழவேண்டும் என்பதேயாகும்.

இறுதியாக, மற்றொரு உண்மையை கவனிக்க வேண்டுகிறோம். காங்கிரஸ் தலைவர் தேர்தல் போக்கு இந்த மெய்மையை வலுவுறுத்துகிறது? தென்னாட்டு வடநாட்டு உணர்ச்சி, மறைக்க முடியாததாகிவிட்டது? இந்த நிலைமையை செம்மைப்படுத்தவோ அல்லது இத்துறையில் ஒருவழி தீர்ப்புக் கூறவோ, இவ்விரு தென்னாட்டு அறிவாற்றல் வீரர்களின் போர் முறையும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகிவருகிறது. இதற்கான தகுந்த காலம் வந்துவிட்டது வந்துவிட்டது. என்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்.

காந்தியார் கனவுகண்ட ராமராஜ்யம்—சத்திய ராஜ்யம்—எல்லாரும் இன்னாட்டு மக்கள், எல்லாருக்கும் சமவுரிமையுண்டு என்ற சமத்துவ ராஜ்யம் ஏற்படவேண்டுமானால் இருவரின் உதவி இன்றியமையாததென்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்.

இருவர் பெயர்களின் முதலெழுத்துக்கள் இணைந்திருப்பதைக் கவனியுங்கள். இரண்டும் நெடிலின ரா. இந்த ராமரும் ராஜாவும் இணைந்து முயற்சித்தால் உண்மையான சத்திய ராம்ராஜ்யம்—சமத்துவ ராம்ராஜ்யம் எளிதில் கிடைக்குமென்பது உறுதி! உறுதி! உறுதி!

**வாழ்க**

**பெரியாரும் ராஜாஜியும்**

**லட்சம் ரூபாய்**
**நட்சத்திரம்**
தொடர் கதை
அடுத்தவாரம் வெளிவரும்.

# முதலாவது ஹிந்தி மொழிப்போர்.

B. கணேசன்
[B. A. (Honrs.)]

பெரியார் சார்பினால் நீதிக்கட்சிக்கு ஒருதனி சிறப்பு ஏற்பட்டது. அதன் போக்கிலேயே புதுமை காணப்பட்டது. வெறும் பனக்காரர்களும் பட்டதாரிகளும் நிறைந்தது தான் நீதிக்கட்சியென்ற எதிரிகளின் விஷம பிரச்சாரத்துக்கு சாவு மணியடிக்கும் சந்தர்ப்பமேற்பட்டது. உத்தியோகவேட்டையே கட்சியின் வேலைத்திட்டமென்ற தன்னலத்தரகரின் வெற்றுரைகள் பொய்யுரைகளாக்கப் பெற்றன.

காங்கிரசார் கோரும் சுய வாட்சியைத்தான் நீதிக்கட்சியாரும் கோருகின்றனர். காங்கிரசார் செல்ல விரும்பும் சட்டசபைக்குத்தான் நீதிக்கட்சியாரும் செல்லவிரும்புகிறார்கள். ஆனால் காங்கிரசார் சட்டசபைசென்று மந்திரி பதவி யேற்பதா இல்லையா என்பதை வெளியாற் சொல்லாமல் இரகசியமாய் வைத்துள்ளார்கள். நீதி கட்சியினர் வெளிப்படையாய்ப் பதவியேற்போம் என்று சொல்லுகிறார்கள்" என்று 1937-ல் பெரியார் நீதிக்கட்சியின் போக்கைத் தெளிவுபடுத்தினார்.

"இந்நாட்டு மக்கள் பல்வேறு வகிப்பினர்களாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்படி சாதியால், சம்பிரதாயத்தால். சாஸ்திரத்தால் நசுக்குண்ட பல்வேறு சமூகத்தாருக்கும் அவரவர்கள் மக்கள் தொகைக்கேற்ப உத்தியோகம், பதவி வழங்கப்பெற வேண்டும். இதைத்தான் நீதிக் கட்சி கூறுகிறது. இதைத்தான் காங்கிரஸார் தேசத்துரோகம் என்கின்றனர்." என்று எதிரிகள் வாயடங்கி யொடுங்கும்படி நீதிக்கட்சியின் கொள்கைமுறையை விவரித்தார்.

"பிறவி காரணமாகவுள்ள வேறுபாட்டுக் கொடுமைகளை அடியோடு ஒழித்துவிடவேண்டும்" என்று நீதிக்கட்சியின் சார்பில் நின்று பேசினார். பெரியாரால் கொடுக்கப்பெற்று, நீதிக்கட்சியினரால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற வேலைத் திட்டத்தில் மேற்கண்ட நிபந்தனைகளும் அடங்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியாரின் வேலைத்திட்டம் முற்றிலும் தான்தோற்றுவித்த சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டதொன்றாகும். எனவே அறிவை, நீதியை அடிப்படையாகக் கொண்டவொரு திட்டத்தை ஏகாதிபத்தியக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாததில் வியப்பில்லை. அதே நேரத்தில், நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபடுவதாகச் சொல்லிக்கொண்டிருந்த நீதிக்கட்சி ஏற்றுக்கொண்டதிலும் வியப்பில்லை.

சுயமரியாதைக்கட்சியின் அரசியல் மேடையாக ஆக்கிக்கொண்டார் பெரியார் நீதிக்கட்சியை. நீதிக்கட்சி மேடையில் தன்னுணர்வுக் கொள்கைகள், மக்கள் சமுதாய முன்னேற்ற மெய்யுரைகள் அறிவுக் கருத்துக்கள் அள்ளி வீசப்பெற்றன. மற்ற அரசியல் கட்சிகளின் வேலைத் திட்டத்தில், கொள்கையில், பிரசாரத்தில் காணப்படாத முற்போக்கித்திட்டங்கள் பல நீதிக்கட்சிக்கு வகுக்கப் பட்டன பெரியாரால். நீதிக்கட்சி வெறும் அரசியல் கட்சிமட்டுமல்ல, பட்டம், பதவி வகிக்க விழையும் கட்சி மட்டுமல்ல, தன்னாட்சி கோரும் கட்சிமட்டுமல்ல, பொதுவுடமை விழையும் கட்சி மட்டுமல்ல; அது மக்களை அறிவுத் துறையில் அழைத்துச் செல்லும் கட்சி, மானிட சமுதாயத்துக்கு மேன்மை விழையும் கட்சி, உண்மையான சுயவாட்சிக்கு வேலை செய்யும் கட்சி, யாவருக்கும் பொது உரிமை, சம வாய்ப்பு அளிக்கப்பெற வேண்டுமென வலியுறுத்திவரும் கட்சி, இந்நாட்டை இன்பபுரியாக்கக் கனவு காணுங் கட்சியெனப் பொதுமக்கள் உணரலாயினர்.

இவ்விதம் பெரியாரின் தொடர்பால் நீதிக்கட்சியின் தோற்றத்திலே ஒரு சோபை, போக்கிலே ஒரு முறுக்கு ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும்.

நீதிக்கட்சியில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் புகுத்தல் கூடாதென நீதிக்கட்சிப் பிரமுகர்கள் பலர் மனவேறுபாடுற்றது ஒருபுறமிருக்க, "சுயமரியாதை இயக்கப் தனித்து நின்றே வேலை செய்ய வேண்டும், அது அரசியல் கட்சி எதுவுடனும் சேர்தல் கூடாது. சட்டசபையில் அமர்வது அதன் வேலைத் திட்டமல்ல" என்று சுயமரியாதை இயக்கத்தோழர்கள் பலர் அபிப்பிராயப்பட்டு எடுத்துக் கூறலாயினர். தோழர்களின் அபிப்பிராயத்தைப் பெரியார் மனங்கொள்ளவில்லை. தான் மேற்கொண்ட கொள்கையினை சிறிதும் தயக்கமின்றி முன்னின்று நடத்தும் பணியிலீடுபடலானார். இலட்சியவாதிகள் கட்டு திட்டங்களுக்கு கட்டுப்படார். கட்டுப்பாடுகளுக்கிடையே அவர்களது இலட்சியம், குறிக்கோள் நிறைவேறுவதெங்கனம்?

1937-ம் ஆண்டுத்தேர்தலில் நீதிக்கட்சி எதிர்பாரத வகையில் மாபெருந் தோல்வியுற்றது. கட்சியின் பெரும் பெருந் தலைவர்களெல்லாம் ஆங்காங்கு தங்கள் தங்கள் தொகுதிகளில் தோல்வியடைந்தனர். நீதிக்கட்சியை ஆழாகுழி தோண்டி புதைத்து விட்டோமென வெறிமயக்கத்தில் வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றித்திரிந்தனர் காங்கிரசார்.

நீதிக்கட்சியின் தோல்விக்குக் காரணம் பெரியாரின் போக்கேவி தீப்ர யாகுமென்றும், சுயமரியாதைக்கொள்கைகளை நீதிக்கட்சியில் புகுத்தமுனைந்தது இமாலயத்தவறென்றும்; சட்டசபை அதிகார அந்தஸ்துப் பதவிகளிலமர கனவு கண்டிருந்த தன்னலவாதிகள்பலர் பெரியாரைக் குறை கூறலாயினர். எதிர்ப்பைக்கண்டு அஞ்சுபவன்கோழைமட்டுமல்ல; தான்கொண்ட கொள்கைக்கும் தான் பிறந்த நாட்டுக்கும் துரோகி யென்பதை பெரியார் நன்கறிவார். எதிர்ப்புக் கஞ்சியிருந்தால் அவர்என்றைக்கே பொதுப்பணியிலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டுமே!

தொடரும்

டெலிபோன் : 86729.

**நியூடன் அண்டு கம்பெனி,**
80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,
சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganadha Naidu, 38, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVIAR.